பெரும் அளவு வீழ்ச்சி அடைந்திருப்பதால், அதை உற்பத்தி செய்யத் தயங்குகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, பச்சைத் தேயிலைக்கும் கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போடவும்.

சேத்தியாதோப்பு அரசு மருத்துவமனை.

*வினா எண். 497—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரம் வட்டம், சேத்தியாதோப்பு அரசு மருத்துவ மனையில் டாக்டர் பதவி நிரப்பப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) தற்போது இப்பதவி காலியாக இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, சிதம்பரம் வட்டம், சேத்தியாதோப்பு அரசு மருத்துவ மனையில் தற்பொழுது டாக்டர் இருக்கிறார் என்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். அதற்காக, நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கேள்வி நீண்ட நாளைக்கு முன்னாலே போட்ட கேள்வி. இரண்டு ஆண்டுகளாக, அங்கு அடிக்கடி டாக்டர் இல்லாத நிலைமை ஏற்படுகிறது. கிராமப்புறங்களில் தங்குவதற்கு வசதியல்லாத நிலைமையிருப்பதால், டாக்டர்கள் தங்குவதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்து, அவர்கள் சேவை செய்ய வழிவகுக்கும் வகையில், சிறப்பான ஊதியமும் கொடுத்து டாக்டர்கள் நல்ல முறையிலே கிராமங்களிலே வேலை செய்ய ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா? அதே போல், 4 மாதங்களாக திருமட்டத்திலே டாக்டர் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. அதையெல்லாம் அரசு சீர் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமப்புறங்களிலே மருத்துவர்கள் மிக நல்ல முறையில் பணியாற்ற வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இந்த அரசு பொறுப்பேற்றுக்

கொண்டதற்குப் பின்னாலே, கிராமப்புறத்திலே இருக்கிற மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் தங்குவதற்கான வசதி களைசெய்து தந்தாக வேண்டுமென்ற ஒரு நல்ல திட்டம் இன்றைய தினம் இந்த அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்ன அந்தக் குறைபாடு விரைவில் நீங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

அடுத்து, ஸ்ரீமுஷ்டத்தைப்பற்றிக் கேட்டார்கள். இப் பொழுது அங்கே ஒரு மருத்துவர்—தென் ஆற்காடு மாவட்டத் திலே இருக்கிற ரிசர்வ் டாக்டர்—பணியாற்றுகிறார். ஆகவே, மருத்துவர் இல்லை என்ற நிலை இன்று இல்லை என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

(திரு. துரை முத்துசாமி நின்றார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரை முத்துசாமி, ஏற்கனவே அலுவல் ஆய்வுக் குழுவில், தொகுதி சம்பந்தப்பட்ட கேள்வியானால், இரண்டு துணைக் கேள்விகளைக் கேட்க தொகுதி சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று தான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. துரை கலியமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல எந்த மருத்துவ மனையாக இருந்தாலும் டாக்டர்கள் ரிசர்வ் டியூடி என்று போடப்படுகிறது. தற்பொழுது நான் கூறுவது அங்கே நிரந்தரமாக டாக்டர்கள் இல்லை என்ற நிலைமை. ஏதோ 1 மணி, 2 மணி நேரம் என்று வந்து, இரண்டு மூன்று நாட் களுக்கு ஒரு முறை சிகிச்சை செய்துவிட்டு போகிறார்கள். தொடர்ந்து அங்கே இருப்பதற்கு வாய்ப்பாக இல்லை என்றும் அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்றும் அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேர வைத் தலைவர் அவர்களே, பணியாற்றக்கூடிய மருத்துவர்களில் சில பேர் சில நேரங்களில் விடுப்புகளில் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. பெண் மருத்துவர்களாக இருந்தால் பிரசவத்திற்காக விடுப்புகளில் போக வேண்டிய சூழ்நிலை ஏற் படுகிறது. அப்படிப்பட்ட நேரங்களில் பணியாற்றுவதற் காகத்தான் ரிசர்வ் டியூடியில் இருக்கும் மருத்துவர்கள் பயன் படுத்தப்படுகிறார்கள். அந்த மாதிரி சூழ்நிலையில்தான் மருத்து வர்கள் இல்லை என்ற நிலை ஏற்படுகிறது. அதைக் கூட சமாளிப்பதற்காகத்தான் மாவட்ட மருத்துவ நிலையங்களில் கூட இன்றைக்கு ரிசர்வ் மருத்துவர்கள் போடப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.